பொருளடக்கம்

குகைவாசிகள் கொள்கைப் பாதை 9

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 16

1 நபிமார்களின் வாரிசுகள் இன்றும் இருக்கிறார்கள் 23

2 இமாம்களின் பாதை ஒரே பாதை 29

1. நேர்வழி ஒன்றே; அந்த வழிதான் நபித்தோழர்களின் வழி 29
2. யாரைப்போல் நபியைப் பின்பற்ற வேண்டும்? 31
3. யாரைப்போல் ஈமான்கொள்ள வேண்டும்? 32
4. நபித்தோழர்களின் பாதையைவிட்டுத் தடம்புரண்டால் என்னவாகும்? 33
5. ஏன் நபித்தோழர்களைப்போல் மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும்? 34
6. ஸலஃப் என்பவர்கள் யார்? 35
7. நபியவர்களின் இறுதி உபதேசம் 36
8. பிரிவினைகள் உண்டாகக் காரணம் பித்அத்துகளே 38

3 அடிப்படையில் இமாம்களிடம் கருத்து வேறுபாடு இல்லை 41

1. முதல் நிலை: நபியவர்களின் காலம் 42
2. இரண்டாவது நிலை: நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் காலம் 43
3. மூன்றாவது காலம்: அலீ ﷺ அவர்களின் மரணத்திலிருந்து எட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை 43
4. நான்காவது காலம்: உமையாக்கள் பலவீனப்பட்டு அப்பாஸிய பரம்பரை ஆட்சி தொடங்கிய காலம் 46

4 இமாம் அபூ ஹனீஃபா 49

- சிறப்புகள் 50

5 இமாம் மாலிக் 53
- சிறப்புகள் 54
- இறுதிக்காலம் 55

6 இமாம் ஷாஃபிஈ 57
- சிறப்புகள் 58
- நபிவழியில் உறுதி 59

7 இமாம் அஹ்மது ﷺ நபிவழியின் ஆயுதம் 61
- சிறப்புகள் 61
- இறுதிக்காலம் 62

8 இமாம்கள் பார்வையில் நபித்தோழர்கள் 63
1. நபித்தோழர்கள் – மேன்மையான மக்கள் 63
2. நபித்தோழர்களை விமர்சிப்பவன் வழிகேடன் 64
3. நபித்தோழர்கள் – கண்ணியத்தின் சமுதாயம் 67

9 இமாம்கள் பார்வையில் தவ்ஹீது 71
1. தவ்ஹீது தெள்ளத் தெளிவானது 71
2. தவ்ஹீது சாரம் 71
3. அல்லாஹ்வின் பண்புகளை ஆராயாதீர்! 72
4. அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் – தவ்ஹீதின் அடிப்படை 75
- அல்லாஹ்வின் பண்புகளைத் திரிப்பவன் வழிகேடன் 76
5. அல்லாஹ்வை மறுமையில் பார்ப்போம் 79
6. தவ்ஹீது – இமாம் ஷாஃபிஈ ﷺ அழகிய விளக்கம் 82
7. அல்லாஹ்வை அவன் வருணித்தபடி நம்புவதே தவ்ஹீது 86
8. தவ்ஹீதில் சுயக்கருத்து கூடாது 87
9. இறங்குதல் அல்லாஹ்வின் செயல்களில் ஒன்று 87
10. அல்லாஹ் அர்ஷ் மேல் உயர்ந்திருக்கிறான் 88
11. அல்லாஹ்வின் அறிவு எல்லா இடத்திலும்! 90
12. அல்லாஹ் பேசும் பண்புடையவன் 90
13. குர்ஆன் ஒரு படைப்பு அல்ல 91

14. பிரார்த்தனைகள் அல்லாஹ்வுக்கே 95
15. சத்தியம் அல்லாஹ்வின் மீதே 96
16. தவக்குல் அல்லாஹ்வின் மீதே 97

10 இமாம்கள் பார்வையில் தத்துவம், தர்க்கம் **98**
1. தத்துவத்திலிருந்து நபிவழிக்கு 98
2. தத்துவம் பேசுபவன் அழிவான் 99
3. தத்துவம் – பித்அத்தின் பிறப்பிடம் 99
4. தர்க்கம் – ஒரு மூடத்தனம் 100
5. தத்துவவாதியிடம் எச்சரிக்கை 101
6. தத்துவம் – பாவத்தில் போதுமானது 101
7. மார்க்கமும் தர்க்கமும் இரு துருவங்கள் 102
9. பித்அத்வாதிகள் அடையாளங்கள் 102
11. தர்க்கம் செய்வோரே! விலகிப்போங்கள் 103
12. தத்துவ புத்தகங்கள் – செத்த புத்தகங்கள் 103
13. தத்துவம் பேசுபவனுடன் உட்காராதீர் 104

11 இமாம்கள் பார்வையில் விதி **107**
1. விதி – மொத்தமும் அடங்கியது 107
2. அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன் 108
3. அனைத்தையும் எழுதிவிட்டான் 109
4. அவன்தான் நாடுகிறான் 109
5. அவன்தான் படைக்கிறான் 110
6. விதி நிர்ப்பந்திப்பதில்லை 111
7. விதியை மறுப்பவன் கதரீ 112
8. விதியை மறுப்பவர்கள் இழிவானவர்கள் 112

12 இமாம்கள் பார்வையில் ஈமான் **115**
1. ஈமான் வெறும் சொல்லல்ல 115
2. ஈமானில் தொழுகையும் உண்டு 115
3. ஈமானில் நற்குணங்களும் உண்டு 116
4. ஈமான் – இமாம் ஷாஃபிஈ ﵀ அழகிய விளக்கம் 117

2

இமாம்களின் பாதை ஒரே பாதை

﴿

1. நேர்வழி ஒன்றே; அந்த வழிதான் நபித்தோழர்களின் வழி

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ﷺ கூறினார்கள்:

خَطَّ لَنَا رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ خَطًّا ثُمَّ قَالَ هَذَا سَبِيلُ اللَّهِ ثُمَّ خَطَّ خُطُوطًا عَنْ يَمِينِهِ وَعَنْ شِمَالِهِ ثُمَّ قَالَ هَذِهِ سُبُلٌ قَالَ يَزِيدُ مُتَفَرِّقَةٌ عَلَى كُلِّ سَبِيلٍ مِنْهَا شَيْطَانٌ يَدْعُو إِلَيْهِ ثُمَّ قَرَأَ { إِنَّ هَذَا صِرَاطِي مُسْتَقِيمًا فَاتَّبِعُوهُ وَلَا تَتَّبِعُوا السُّبُلَ فَتَفَرَّقَ بِكُمْ عَنْ سَبِيلِهِ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் எங்களுக்கு ஒரு கோடு வரைந்து காட்டி, 'இதுதான் அல்லாஹ்வுடைய பாதை' எனக் கூறினார்கள். பின்னர், அந்தக் கோட்டின் வலப்புறமும் இடப்புறமும் பிரிகின்ற கிளைக்கோடுகளை வரைந்துவிட்டு, 'இவையே பிரிவினைகளின் பாதைகள். இவற்றின் ஒவ்வொரு பாதையிலும் (உட்கார்ந்து கொண்டு) ஷைத்தான் தன் பக்கம் மக்களை அழைக்கிறான்' என்றார்கள். பின்பு, இவ்வசனத்தை (குர்ஆன் 6:153) ஓதினார்கள்:

நிச்சயமாக இதுதான் என்னுடைய நேரான பாதையாகும். அதனையே பின்பற்றுங்கள். மற்ற பாதைகளைப் பின்பற்றாதீர்கள். அப்பாதைகள் அல்லாஹ்வுடைய பாதையிலிருந்து உங்களைப் பிரித்துவிடும். (முஸ்னத் அஹ்மத் 4142, மிஷ்காதுல் மஸாபீஹ் 166)

இமாம் இப்னுல் கய்யிம்[6] ﷺ (இறப்பு ஹிஜ்ரீ 751) கூறினார்கள்: இதிலிருந்து அல்லாஹ்விடம் கொண்டு சேர்க்கும் பாதை ஒரே

---

6 இப்னுல் கய்யிம்: முஹம்மது இப்னு அபூபக்ர் என்பது இயற்பெயர். ஹிஜ்ரீ 691 (கி.பி. 1292) ஸஃபர் 7 அன்று டமாஸ்கஸில் பிறப்பு. ஏழு வயதிலிருந்தே அறிஞர்களின் சபைகளில் கல்வி தேடி அமர்ந்தார்கள். மார்க்க அறிஞராகிய தம் தந்தையிடமும், அக்காலத்தில் கல்விக்குப் பேர்போன சுமார் இருபத்தைந்து அறிஞர்களிடமும் கற்றார்கள். ஹிஜ்ரீ 712 (கி.பி. 1312)இல் இமாம் இப்னு

2. நபித்தோழர்களின் ஈமானை அளவுகோலாகக் கொண்டே, மற்றவர்களின் ஈமானுக்கு அங்கீகாரம் தருகிறான்; அவர்கள் நேர்வழி அடைந்தவர்களா என்பதை உறுதிப்படுத்துகிறான்.

3. இங்கு ஈமான் என்பது நம்பிக்கைகளை மட்டும் குறிப்பிடாது. அவற்றுடன் வழிபாடுகள், செயல்கள் ஆகியவையும் அடங்கும். இதன் மூலம், நபித்தோழர்களைப்போல் மார்க்கத்தைப் புரிந்து செயல்படுத்தியவர்கள் மட்டுமே, உண்மையில் நேர்வழி அடைந்தவர்கள் என்று அல்லாஹ் தெளிவுபடுத்திவிட்டான்.

4. நபித்தோழர்களின் பாதையைவிட்டுத் தடம்புரண்டால் என்னவாகும்?

وَمَنْ يُشَاقِقِ الرَّسُولَ مِنْ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ الْهُدَى وَيَتَّبِعْ غَيْرَ سَبِيلِ الْمُؤْمِنِينَ نُوَلِّهِ مَا تَوَلَّى وَنُصْلِهِ جَهَنَّمَ وَسَاءَتْ مَصِيرًا

எவர் நேரான வழி இன்னதென்று தனக்குத் தெளிவானதன் பின்னரும் இந்தத் தூதரை விட்டுப் பிரிந்து, ஈமான் கொண்டவர்களின் வழி அல்லாததில் செல்கின்றாரோ, அவரை நாம் அவர் செல்லும் வழியிலேயே செல்லவிட்டு, பின்னர் அவரை நரகத்தில் சேர்த்து விடுவோம். அது செல்லும் இடங்களில் மிகக் கெட்டது *(4:115)*

இவ்வசனத்தில் கிடைக்கும் பாடங்கள்:

1. ஈமான்கொண்டவர்களின் வழி (ஸபீலுல் மூஃமினீன்) என்று அல்லாஹ் குறிப்பிடுவது எதை? இந்த வசனம் இறங்கும்போது ஈமான் கொண்டிருந்தவர்கள் யார்? நபித்தோழர்களைத் தவிர வேறில்லை. அவர்கள் சென்ற வழியையே 'ஸபீலுல் மூஃமினீன்' என்கிறான்.

2. தூதரை விட்டுப் பிரியாமல் அவரைப் பின்பற்றுவதுடன், அவரை விட்டுப் பிரியாது, அவருடனே இருந்து, அவரைப் பின்பற்றிய தோழர்களின் வழியில் சென்றால்தான் ஒருவர் உண்மையில் நேர்வழி சென்றவர் என்பதை அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான்.

3. தூதரைப் பின்பற்றுகிறோம் என்று கூறிக்கொண்டு, அவருடன் வாழ்ந்த மூஃமின்களின் வழிக்கு முரணாக ஒருவர் சென்றால், நிச்சயம் அவர் நேர்வழி பெற்றவராக முடியாது.

4. நேர்வழியைத் தெளிவுபடுத்தும் பொறுப்பு, அதைக் கொண்டு வந்த தூதருக்குரியதாகும். அவரை விட்டுப் பிரியாதிருந்தவர்களுக்கு

3

அடிப்படையில் இமாம்களிடம் கருத்துவேறுபாடு இல்லை

❀

நான்கு இமாம்களின் பேச்சை எடுத்தவுடனே அவர்களின் பெயரில் இருக்கும் மத்ஹபுகளே நமக்கு முதலில் ஞாபகம் வரும். உண்மை இதுதான். அந்த இமாம்கள் பிறப்பு, வளர்ப்பு, கல்வி, போதனைகள் தெரியாதவர்கள் கூட, அவர்களின் பெயரால் உலகம் முழுதும் பரவியுள்ள மத்ஹபுகளைத் தெரியாமல் இருக்கமாட்டார்கள். இமாம் அபூ ஹனீஃபா ﵀ அவர்களைச் சார்ந்து உருவானது ஹனஃபீ மத்ஹபு. இமாம் மாலிக் ﵀ அவர்களைச் சார்ந்து மாலிக்கி மத்ஹபும், இமாம் ஷாஃபிஈ ﵀ அவர்களைச் சார்ந்து ஷாஃபிஈ மத்ஹபும், இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ﵀ அவர்களைச் சார்ந்து ஹன்பலீ மத்ஹபும் உருவாயின.

மத்ஹபு என்றால் என்ன? அறபு அகராதியில் பாதை, வழி என்ற அர்த்தம் இருந்தாலும், இஸ்லாமிய வழக்கத்தில் இவ்வார்த்தை ஒரு சிந்தனைப் பிரிவைக் குறிப்பிடுகின்றது. அந்தச் சிந்தனையைப் பின்பற்றும் ஒரு பிரிவினரை இன்ன மத்ஹபைச் சேர்ந்தவர் என்று அடையாளப்படுத்துவார்கள். அதாவது, இஸ்லாமியச் சட்டங்களை விளக்குவதில் குறிப்பிட்ட வழிமுறையைக் கையாளும் போக்கு ஒரு சிந்தனைப் பிரிவாக காலப்போக்கில் வடிவம் கொண்டது. அதற்கென மக்கள் பலர் இருந்தார்கள்.

இது உடனே சிலருக்குப் புரியாமல் போகலாம். அதென்ன வழிமுறை என்று கேட்கலாம். இக்கேள்வி எதார்த்தமானதுதான். ஏனென்றால், இஸ்லாமிய வரலாற்றில் மத்ஹபுகள் உருவான பின்னணியையும், இஸ்லாமியச் சட்டங்களை எங்கிருந்து, எப்படிப் பெற வேண்டும் என்பதையும் தெரிந்துகொள்ளாத வரை மத்ஹபுகளின் கட்டமைப்பைப் புரிய முடியாது.

இது ஒரு விரிவான விசயம் என்றாலும், நான்கு இமாம்களின் வரலாற்றுப் பங்களிப்புடன் மத்ஹபுக்குத் தொடர்பு இருப்பதால்,

2. இரண்டாவது நிலை:
நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் காலம்
(கி.பி. 632 முதல் 661 வரை மொத்தம் 29 வருடங்கள்)

நபியவர்களின் இறப்புக்குப் பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அபூபக்ர் ﷺ அவர்களும், அதற்குப் பின் உமர் ﷺ, உஸ்மான் ﷺ, அலீ ﷺ ஆகியவர்களும் மக்களை வழிநடத்திய காலம் இது. இஸ்லாமிய அரசு சிரியா, ஜோர்டான், எகிப்து, இராக், பாரசீகம் போன்ற நாடுகளில் பரவியது. குர்ஆனிலிருந்தும் நபிவழியிலிருந்தும் தாங்கள் தெரிந்து வைத்திருந்த சட்டங்களைத் தெளிவுபடுத்தி மக்களை வழிநடத்திய இவர்கள், தங்களுக்கு ஒன்று தெரியவில்லை என்றால், மூத்த நபித்தோழர்களை அழைத்து ஆலோசனை கேட்பார்கள். அதில் ஒருமித்த கருத்து வரவில்லை என்றால், பெரும்பான்மையைக் கவனித்து முடிவெடுப்பார்கள். அதுவும் சாத்தியமில்லை என்றால், கடும் முயற்சியுடன் சுயமாகத் திறனாய்வு (இஜ்திஹாத்)[8] செய்து முடிவெடுப்பார்கள்.

இஸ்லாமியச் சட்டங்களைக் குர்ஆன், நபிவழியிலிருந்து தெரிந்து கொள்வதற்கு இக்காலத்தில் இரண்டு வழிமுறைகள் நடைமுறைக்கு வந்தன. ஒன்று, நபித்தோழர்களின் ஏகோபித்த கருத்தைப் பார்ப்பது (இஜ்மாஃ). இன்னொன்று, குர்ஆன் நபிவழி ஆதாரங்களின் அடிப்படைக்கு முரண்படாத வகையில் ஒப்புநோக்கி சட்டம் எடுப்பது (கியாஸ்). நபியவர்கள் இல்லை என்ற நிலையில், புதிதாக எழும் பிரச்சினைகள், கேள்விகளுக்கு நேரடியாக குர்ஆன், நபிவழியிலிருந்து அறிவுரைகள் கிடைக்காவிட்டால், அவற்றை ஆய்வுசெய்து அறியும் காலம் தொடங்கியது.

3. மூன்றாவது காலம்:
அலீ ﷺ அவர்களின் மரணத்திலிருந்து எட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை

இக்காலம் சுமார் நூறு வருடங்கள் நீடித்தது. நான்காம் கலீஃபா அலீ ﷺ அவர்கள் கொல்லப்பட்ட பின், முஆவியா இப்னு அபூசுஃப்

---

8 இஜ்திஹாத் (اجْتِهَاد): குர்ஆன், நபிவழி குறித்து ஆழமான கல்விகொண்டவர், ஏதேனும் ஒரு விவகாரத்திற்குத் தீர்ப்பு வேண்டி குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களை ஆய்வுசெய்து பெரும் முயற்சி எடுப்பது.

4

இமாம் அபூ ஹனீஃபா ﵀
அறிஞர்களின் பேராசிரியர்

﵀

✦ அல்இமாம் (மார்க்க வழிகாட்டி), அல்ஃபகீஹ் (சட்ட வல்லுநர்), இராக்கின் அறிஞர் அபூ ஹனீஃபா அவர்களின் சுருக்க வரலாறு

பெயர்	:	நுஅமான் இப்னு ஸாபித் இப்னு ஜுவ்தா
சிறப்புப்பெயர்	:	அபூ ஹனீஃபா
தந்தை	:	ஸாபித்
கோத்திரம்	:	தைம்
பிறப்பு	:	ஹிஜ்ரீ 80 (கி.பி. 703)
ஊர்	:	கூஃபா (இராக் நாடு)
தொழில்	:	துணி வியாபாரம் (கடை பிரபலம்)

இமாம் அவர்கள் ஆரம்பத்தில் தத்துவக் கலையை அதிகம் அதிகம் கற்றார்கள். அதன் எல்லாத் துறைகளிலும் ஆழமான அறிவைப் பெற்றார்கள். பின்னர், அதனை வெறுத்து ஒதுக்கிவிட்டு, ஹதீஸ் மற்றும் ஃபிக்ஹின் பக்கம் தமது கவனத்தைச் செலுத்தினார்கள்.

ஹம்மாது இப்னு ஸைது ﵀ அவர்களைத் தம்முடைய முதன்மை ஆசிரியராகக் கொண்டு, அவர்களிடம் பதினெட்டு வருடங்கள் கல்வி படித்தார்கள். ஹம்மாது அவர்கள் வாழ்ந்துகொண்டிருந்த காலத்திலேயே பிறருக்குக் கல்வி புகட்டும் தகுதியை அடைந்திருந்த போதும், தம் ஆசிரியர் இருக்கும் வரை தம்மை ஒரு மாணவராகவே ஆக்கிக் கொண்டார்கள். ஹிஜ்ரீ 120-களில் ஹம்மாது அவர்கள் இறந்த பின்னரே, தாம் பலருக்குக் கற்றுக் கொடுக்கத் தொடங்கினார்கள். அப்போது, அவர்கள் நாற்பது வயதை எட்டியிருந்தார்கள்.

கூஃபா நகரின் பிரபல அறிஞரானார்கள். உமையாக்கள் ஆட்சியின் போது, கூஃபா உடைய நீதிபதி (காழீ) பொறுப்பு அவர்களுக்குத் தரப்பட்டது. ஆனால், அவர்கள் அதை மறுத்துவிட்டார்கள். கூஃபாவின் ஆளுநர் யஜீது இப்னு உமருக்கு இது கோபத்தை

5

இமாம் மாலிக் ﵀
மதீனாவின் பேரறிஞர்

❀

+ ஷெய்குல் இஸ்லாம் (இஸ்லாமின் பேரறிஞர்), உம்மத்திற்கு அத்தாட்சி, மதீனாவின் பேரறிஞர் இமாம் மாலிக் ﵀ அவர்களின் சுருக்க வரலாறு

பெயர்	:	மாலிக் இப்னு அனஸ் இப்னு மாலிக் இப்னு அபூஆமிர்
சிறப்புப்பெயர்	:	அபூஅப்தில்லாஹ்
தந்தை	:	அனஸ்
பிறப்பு	:	ஹிஜ்ரீ 94 (கி.பி. 717)
ஊர்	:	மதீனா

இமாம் அவர்களின் பாட்டனார் மாலிக் உடைய தந்தை அபூஆமிர் ﵁ அவர்கள் மூத்த நபித்தோழர்களில் ஒருவர். இவர் மதீனாவிற்கு வந்து தங்கியபோது, பத்ர் போர் முடிந்திருந்தது. எனவே, மற்ற எல்லாப் போர்களிலும் நபி ﷺ அவர்களுடன் கலந்துகொண்டார்.

இமாம் அவர்களின் பாட்டனார் மாலிக் ﵁ அவர்கள் மூத்த தாபியீகளில் ஒருவர். நபித்தோழர்கள் உமர் ﵁, தல்ஹா ﵁, அபூ ஹுரைரா ﵁, ஹஸ்ஸான் இப்னு ஸாபித் ﵁ மற்றும் ஆயிஷா ﵂ ஆகியோரிடமிருந்து ஹதீஸ்களை அறிவித்துள்ளார். உஸ்மான் ﵁ அவர்கள் இறந்தபோது, அவர்களின் உடலைச் சுமந்து சென்று அடக்கம் செய்த நான்கு நபர்களில் இவரும் ஒருவர்.

இமாம் அவர்கள் மதீனாவின் அன்றைய மகத்தான அறிஞர்கள் இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரீ[14] அவர்களிடமும், அப்துல்லாஹ்

---

14 அபூபக்ர் முஹம்மது இப்னு முஸ்லிம் இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரீ ﵀ ஆகிய இவர்கள், ஹிஜ்ரீ 58இல் முஆவியா ﵁ ஆட்சிக்காலத்தில் மதீனாவில் பிறந்தார்கள். பின்னர் சிரியாவில் குடியேறினார்கள். சுமார் பத்து

6

இமாம் ஷாஃபிஈ ﵀

இரண்டாம் நூற்றாண்டின் முஜத்தித்

﵀

✦ நூற்றாண்டின் அறிஞர், ஹதீஸ்களின் பாதுகாவலர், மார்க்கத்தின் சட்டவல்லுநர் இமாம் ஷாஃபிஈ ﵀ அவர்களின் சுருக்க வரலாறு

பெயர்	:	முஹம்மது இப்னு இத்ரீஸ்
சிறப்புப்பெயர்	:	அபூஅப்தில்லாஹ் அஷ்ஷாஃபிஈ
தந்தை	:	இத்ரீஸ்
பிறப்பு	:	ஹிஜ்ரீ 150 (கி.பி. 767)
ஊர்	:	கஸ்ஸா (ஷாம் நாடு)

இமாமவர்களின் சிறுவயதிலேயே தந்தை இத்ரீஸ் இறந்துவிட்டார். அவர்களின் தாய், தம் மகன் கஸ்ஸாவில் வளர்ந்தால், அந்த ஊரின் தாக்கத்தால் அவரின் மார்க்கம் களங்கப்படும் எனப் பயந்து, மக்காவில் குடிபெயர்ந்துவிட்டார். அப்போது, இமாமவர்களுக்கு இரண்டு வயது.

இமாமவர்கள் வில்வித்தையில் தம் சமகால வீரர்களையும் வென்றார்கள். பிறகு, அறபுமொழி இலக்கணம், கவிதை போன்ற வற்றில் திறமையானார்கள். பின்னர், மதீனா சென்று இமாம் மாலிக் ﵀ அவர்களிடம் ஹதீஸ்களையும் ஃபிக்ஹையும் கற்றார்கள். மாலிக் ﵀ அவர்களின் மூவத்தாவை மனனம் செய்து, அதை அவர்களிடம் ஒப்புவித்தார்கள்.

மாலிக் ﵀ அவர்களின் மரணத்திற்குப் பின், அங்கிருந்து யெமன் சென்று, அங்கு கல்வி புகட்டினார்கள். ஹிஜ்ரீ 186-இல் ஷீஆ சார்புடையவர் என்று கைது செய்யப்பட்டு, இராக்கில் மன்னர் ஹாரூன் அர்ரஷீது அவர்களின் முன் நிறுத்தப்படும் வரை அங்குதான் இருந்தார்கள். ஆயினும், தம்முடைய சரியான நம்பிக்கைகளைப் பற்றி எடுத்து விளக்கியதின் மூலம் விடுதலை செய்யப்பட்டார்கள். பின்னர், இராக்கில் இமாம் அபூஹனீஃபா ﵀ அவர்களின் மூக்கிய

7

இமாம் அஹ்மது ﵀ நபிவழியின் ஆயுதம்

❀

✦ ஷெய்குல் இஸ்லாம், அல்அல்லாமா, நபிவழியின் பாதுகாவலர் இமாம் அஹ்மது இப்னு ஹம்பல் ﵀ அவர்களின் சுருக்க வரலாறு

பெயர்	:	அஹ்மது இப்னு முஹம்மது இப்னு ஹம்பல்
சிறப்புப்பெயர்	:	அபூஅப்தில்லாஹ்
தந்தை	:	முஹம்மது
பிறப்பு	:	ஹிஜ்ரீ 164 (கி.பி. 780)
ஊர்	:	பக்தாத்

இமாமவர்களின் தந்தை சிறுவயதிலேயே இறந்துவிட்டார். தாய் தான் வளர்த்தார். ஹதீஸ்களையும் ஃபிக்ஹையும் இமாம் அபூஹனீஃபாவின் மாணவர் அபூயூசுஃப் ﵀ அவர்களிடமும், இமாம் ஷாஃபிஈ ﵀ அவர்களிடமும் கற்றார்கள்.

❊ சிறப்புகள்

இமாம் ஷாஃபிஈ ﵀ கூறியதாவது: நான் பக்தாதை விட்டுவந்தபோது, அஹ்மது இப்னு ஹம்பலைவிட அதிக இறையச்சமும், அதிகக் கல்வியும், மகத்தான ஃபிக்ஹும் உடைய சிறந்த மனிதரை விட்டுவரவில்லை.

இமாம் அபூதாவூது ﵀ கூறியதாவது: இமாம் அஹ்மது ﵀ அவர்களின் வகுப்புகள், மறுமையை நினைவூட்டும் சபைகள். அவற்றில் உலக விசயங்களைப் பேசவேமாட்டார்கள். உலக விசயங்களைப் பேசுபவராக நான் ஒருபோதும் அவர்களைக் கண்டதில்லை.

குதைபா இப்னு சஈது ﵀ (இறப்பு ஹி.240) கூறியதாவது: நீங்கள் இமாம் அஹ்மதை நேசிக்கும் ஒருவரைக் கண்டால், அந்த மனிதர் ஸுன்னாவைப் பின்பற்றுபவர் என்று அறிந்துகொள்ளுங்கள்.

9

இமாம்கள் பார்வையில் தவ்ஹீது

❀

1. தவ்ஹீது தெள்ளத் தெளிவானது

سُـئِلَ مَالِكٌ عَنِ الكَلاَمِ وَالتَّوْحِيْدِ، فَقَالَ: مُحَالٌ أَنْ نَظُنَّ بِالنَّبِيِّ -صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ- أَنَّهُ عَلَّمَ أُمَّتَهُ الاسْتِنْجَاءَ، وَلَمْ يُعَلِّمْهُمُ التَّوْحِيْدَ، وَالتَّوْحِيْدُ مَا قَالَهُ النَّبِيُّ -صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ-: (أُمِـرْتُ أَنْ أُقَاتِـلَ النَّاسَ حَتَّى يَقُوْلُـوا: لاَ إِلَهَ إِلاَّ اللهُ) فَمَا عُصِمَ بِـهِ الدَّمُ وَالمَالُ، حَقِيْقَةُ التَّوْحِيْدِ

1. இமாம் ஷாஃபிஈ ﵀ கூறினார்கள்: இமாம் மாலிக் ﵀ அவர்களிடம் தவ்ஹீதைப் பற்றியும் தத்துவக் கலை பற்றியும் கேட்கப்பட்டது. அப்போது, அவர்கள் கூறினார்கள்: ஒருவர் சொல்லும் கருத்தில் நம்பவே முடியாதது எதுவெனில், அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் தம் சமுதாயத்திற்கு மலஜலம் கழிப்பின் ஒழுக்கங்களையும் கற்றுத் தந்தார்கள்; ஆனால், தவ்ஹீதைப் புரியும்படி கற்றுத் தராமலே விட்டுவிட்டார்கள் என்பதுதான். அல்லாஹ்வின் தூதர் பேசிய தவ்ஹீது இதுதான்: 'மனிதர்கள் 'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிரவேறில்லை' என்று சொல்லும்வரை, அவர்கள்மீது போர்புரியும்படி எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது..' (ஸஹீஹுல் புகாரீ 25, முஸ்லிம் 32) அதாவது, எது ஒருவரின் செல்வத்தையும் இரத்தத்தையும் பாதுகாக்குமோ, அதுவே தவ்ஹீதின் உண்மைநிலை. (தம்முல் கலாம் 210)

2. தவ்ஹீது சாரம்

2. இமாம் ஷாஃபிஈ ﵀ கூறினார்கள்:

الْقَوْلُ فِي السُّـنَّةِ الَّتِي أَنَا عَلَيْهَا وَرَأَيْتُ أَصْحَابَنَا عَلَيْهَا أَهْلِ الْحَدِيثِ الَّذِينَ رَأَيْتُهُمْ وَأَخَذْتُ عَنْهُم مِثْلَ سُفْيَانَ وَمَالِكٍ وَغَيْرِهِمَا الإِقْرَارُ بِشَهَادَةِ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ ، وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ وَأَنَّ اللَّهَ تَعَالَى عَلَى عَرْشِـهِ فِي سَـمَائِهِ يَقرُبُ مِنْ خَلْقِهِ كَيْفَ شَـاءَ وَأَنَّ اللهَ تَعَالَى يَنْزِلُ إِلَى

10

இமாம்கள் பார்வையில் தத்துவம், தர்க்கம்

❀

1. தத்துவத்திலிருந்து நபிவழிக்கு

1. இமாம் அபூஹனீஃபா ﵀ கூறினார்கள்:

أَصْحَابُ الْأَهْوَاءِ فِي الْبَصَرَةِ كَثِيْرٌ وَدَخَلْتُهَا عِشْرِيْنَ مَرَّةً وَنِيْفاً وَرُبَّمَا أَقَمْتُ بِهَا سَنَةً أَوْ أَكْثَرَ أَوْ أَقَلَّ ظَانًّا أَنَّ عِلْمَ الْكَلَامِ أَجَلُّ الْعُلُومِ

மனஇச்சைகளைப் பின்பற்றும் மக்கள் பஸராவில் அதிகம். நான் அங்கு இருபதிற்கும் அதிகமான தடவை சென்றிருக்கிறேன். சிலநேரங்களில் ஓர் ஆண்டிற்கு அதிகமாகவோ, குறைவாகவோ கூடதங்கியிருக்கிறேன். காரணம், தத்துவக் கலையை மகத்தான கல்வியாக நம்பி ஈர்க்கப்பட்டிருந்தேன். *(மனாகிப் அபீஹனீஃபா, ப:137)*

كُنْتُ أَنْظُرُ فِي الْكَلَامِ حَتَّى بَلَغْتُ مَبْلَغاً يُشَارُ إِلَيَّ فِيهِ بِالْأَصَابِعِ وَكُنَّا نَجْلِسُ بِالْقُرْبِ مِنْ حَلْقَةِ حَمَّادِ بْنِ أَبِي سُلَيْمَانَ فَجَاءَتْنِي امْرَأَةٌ فَقَالَتْ رَجُلٌ لَهُ امْرَأَةٌ أَمَةٌ أَرَادَ أَنْ يُطَلِّقَهَا لِلسُّنَّةِ كَمْ يُطَلِّقُهَا؟ فَلَمْ أُرِدْ أَقُولُ فَأَمَرْتُهَا أَنْ تَسْأَلَ حَمَّاداً ثُمَّ تَرْجِعُ فَتُخْبِرُنِي فَسَأَلْتُ حَمَّاداً فَقَالَ يُطَلِّقُهَا وَهِيَ طَاهِرٌ مِنَ الْحَيْضِ وَالْجِمَاعِ تَطْلِيْقَةً ثُمَّ يَتْرُكُهَا حَتَّى تَحِيْضَ حَيْضَتَيْنِ فَإِذَا اغْتَسَلَتْ فَقَدْ حَلَّتْ لِلْأَزْوَاجِ فَرَجَعَتْ فَأَخْبَرَتْنِي فَقُلْتُ لَا حَاجَةَ لِي فِي الْكَلَامِ وَأَخَذْتُ نَعْلِي فَجَلَسْتُ إِلَى حَمَّادٍ

நான் தத்துவக் கலையை நன்கு கற்றேன். எந்த அளவுக்கெனில், அதில் திறமைசாலியாகிவிட்டேன்.. நாங்கள் ஹம்மாது இப்னு அபீசுலைமான் ﵀ அவர்களின் சபையில் மிக்க நெருக்கமாக அமர்வோம். ஒரு முறை ஒரு பெண் என்னிடம் வந்து, 'தன் அடிமை மனைவியை நபிவழியில் தலாக் செய்ய விரும்புகிறார் ஒருவர். அவர் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டார். அப்பெண்ணுக்கு என்ன பதிலளிப்பது என்றே எனக்குத் தெரியவில்லை. ஹம்மாது

12

இமாம்கள் பார்வையில் ஈமான்

❀

1. ஈமான் வெறும் சொல்லல்ல

1. அப்துர்ரஜ்ஜாக் இப்னு ஹம்மாம் ﵀ கூறினார்கள்:

سَمِعْتُ ابْنَ جُرَيْجٍ وَسُفْيَانَ وَالثَّوْرِي وَمَعْمَرَ بْنَ رَاشِدٍ وَسُفْيَانَ بْنَ عُيَيْنَةَ وَمَالِكَ بْنَ أَنَسٍ يَقُولُونَ: الْإِيْمَانُ قَوْلٌ وَعَمَلٌ يَزِيْدُ وَيَنْقُصُ

நான் இப்னு ஜுரைஜ், சுஃப்யான் அஸ்ஸவ்ரீ, மஅமர் இப்னு ராஷித், சுஃப்யான் இப்னு உயைனா, மாலிக் இப்னு அனஸ் ﵀ ஆகிய அனைவரும் கூறக் கேட்டிருக்கிறேன் இப்படி: ஈமான் என்பது சொல்லும் செயலுமாகும். அது அதிகரிக்கும்; குறையும். *(அல்இன்திகா, பக்: 34)*

2. ஈமானில் தொழுகையும் உண்டு

2. இமாம் மாலிக் ﵀ கூறினார்கள்:

فَقَامَ النَّاسُ يُصَلُّونَ نَحْوَ بَيْتِ الْمُقَدَّسِ سِتَّةَ عَشَرَ شَهْراً ثُمَّ أُمِرُوا بِالْبَيْتِ الْحَرَامِ فَقَالَ اللهُ تَعَالَى (وَمَا كَانَ اللَّهُ لِيُضِيعَ إِيمَانَكُمْ) أَيْ صَلَاتَكُمْ إِلَى بَيْتِ الْمُقَدَّسِ قَالَ مَالِكٌ وَإِنِّي لَأَذْكُرُ بِهَذِهِ قَوْلَ الْمُرْجِئَةِ إِنَّ الصَّلَاةَ لَيْسَتْ مِنَ الْإِيْمَانِ)

ஆரம்பத்தில் நபித்தோழர்கள் (ஜெருசத்திலுள்ள) பைத்துல் முகத்தஸ் நோக்கி பதினாறு மாதங்கள் தொழுதார்கள். பின்பு, (மக்காவின்) பைத்துல் ஹறாம் நோக்கித் தொழுமாறு அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டது. அப்போது, அல்லாஹ் கூறினான்:

وَمَا كَانَ اللَّهُ لِيُضِيعَ إِيمَانَكُمْ

அல்லாஹ் உங்கள் ஈமானை வீணாக்கமாட்டான். *(குர்ஆன் 2:143)*

இவ்வசனத்தில் ஈமான் என்பது பைத்துல் முகத்தஸ் நோக்கிய தொழுகையைக் குறிப்பிடும். தொழுகை ஈமானில் அடங்காது